# 14

# விசுவாசத்தின் அடிப்படைகள்

> விசுவாசமில்லாமல் தேவனுக்குப் பிரியமாயிருப்பது கூடாத காரியம்; ஏனென்றால், தேவனிடத்தில் சேருகிறவன் அவர் உண்டென்றும், அவர் தம்மைத் தேடுகிறவர்களுக்குப் பலன் அளிக்கிறவரென்றும் விசுவாசிக்க வேண்டும் (எபி. 11:6).

விசுவாசிகளாகிய நம்முடைய விசுவாசம் தேவன் இருக்கிறார், அவர் தம்மைத் தேடுகிறவர்களைத் தேடாதவர்களைவிட வித்தியாசமாக நடத்துகிறார் என்ற அஸ்திபாரத்தின்மீது கட்டியெழுப் பப்பட்டிருக்கிறது. நாம் *மெய்யாகவே* இந்தக் காரியங்களை விசுவாசிக் கத் துவங்கும்போது, உடனடியாக அவரைத் தேடுகிறபடியால், அவரைப் பிரியப்படுத்தத் துவங்குகிறோம். தேவனைத் தேடுவது என்றால் 1) அவருடைய சித்தத்தை அறிந்துகொள்ளுதல், 2) அவருக்குக் கீழ்ப்படிதல், 3) அவருடைய வாக்குத்தத்தங்களின்மீது நம்பிக்கை வைத்தல் இவைகளாகும். இந்த மூன்றும் நமது அன்றாட நடக்கையில் காணப்பட வேண்டும்.

இந்த அத்தியாயம் நமது விசுவாச நடக்கையைக் குறித்ததாகும். வேதாகமத்துக்கு விரோதமான தீவிரமான அளவில் சிலர் விசுவாசத்தை வலியுறுத்திவருவது துரதிருஷ்டமான காரியமாகும். அவர்கள் குறிப்பாகப் பொருளாதாரரீதியாகச் செழிப்படைவதை வலியுறுத்துகிறார் கள். இதன் காரணமாக சிலர் இந்தக் கருப்பொருளை அணுகவே தயங்குகிறார்கள். ஆனால் சிலர் நீரில் மூழ்கி இறந்துபோகிறார்கள் என்பதற்காக நாம் குடிப்பதற்குத் தண்ணீர் எடுப்பதை நிறுத்திவிடக் கூடாது. நாம் சமநிலையோடும் வேதாகமரீதியோடும் இருப்போமாக. இதைக்குறித்து வேதாகமம் அதிகமாகப் போதிக்கிறது. தமது பல வாக்குத்தத்தங்களிலும் நாம் நமது விசுவாசத்தைச் செயல்படுத்த வேண்டுமென்று தேவன் விரும்புகிறார்.

தேவன்மீது விசுவாசம் வைத்திருப்பதற்கு இயேசுவானவர் முன்மாதிரியானவராக இருந்தார். தமது சீஷர்களும் தமது முன்மாதிரியைப் பின்பற்ற வேண்டுமென்று அவர் எதிர்பார்த்தார். இதைப் போலவே சீஷர்களை உருவாக்கும் ஊழியரும் தேவன்மீது நம்பிக்கை வைப்பதில் எடுத்துக்காட்டாக இருக்கவும், தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கும்படி தனது சீஷர்களுக்குப் போதிக்கவும் முயலுகிறார். இது மிகவும் முக்கியமான காரியமாகும். விசுவாசமில்லாமல் தேவனைப் பிரியப்படுத்துவது கூடாத காரியம் என்பது மட்டுமின்றி, விசுவாசமில்லாமல் நமது ஜெபங்களுக்குப் பதில் பெறுவதும் கூடாத காரியமாகும் (பார்க்க, மத். 21:22; யாக். 1:5–8). விசுவாசிகள் பெறும் ஆசீர்வாதங்கள் சந்தேகப்படுகிறவர்களுக்குக் கிடைக்காது என்று வேதாகமம் தெளிவாகச் சொல்லுகிறது. இயேசுவானவர் ''விசுவாசிக்கிறவனுக்கு எல்லாம் கூடும்'' என்று சொல்லியிருக்கிறார் (மாற்கு 9:23).

### விசுவாசத்துக்கான விளக்கம்

விசுவாசத்தைக்குறித்த வேதாகம விளக்கத்தை நாம் எபிரெயர் 11:1 வசனத்தில் பார்க்கலாம்:

> விசுவாசமானது நம்பப்படுகிறவைகளின் உறுதியும்,
> காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது.

இந்த வரையறையிலிருந்து விசுவாசத்தின் பல பண்புகளைக் குறித்து நாம் அறிந்துகொள்ளுகிறோம். முதலாவதாக, விசுவாசத்தைப் பெற்றிருக்கிறவன் *உறுதியை* அல்லது நிச்சயத்தைப் பெற்றிருக்கிறான். இது நம்பிக்கையைவிட வேறுபட்டதாகும். ஏனென்றால் ''விசுவாசமானது *நம்பப்படுகிறவைகளின்* உறுதியாக'' இருக்கிறது. நம்பிக்கையில் எப்போதுமே சந்தேகத்துக்கான இடம் இருக்கிறது. நம்பிக்கை எப்போதுமே ''இருக்கலாம்'' என்று சொல்லுகிறது. எடுத்துக்காட்டாக, ''எனது தோட்டத்துக்கு நீர் ஊற்றும்படியாக இன்று மழைபெய்யும் என்று நான் நம்புகிறேன்'' என்று நான் சொல்லலாம். நான் மழை பெய்ய வேண்டுமென்று விரும்பினாலும், மழை பெய்யும் என்ற நிச்சயம் எனக்குக் கிடையாது. ஆனால் விசுவாசமோ எப்போதுமே நிச்சயத்தைக் கொண்டிருக்கிறது. அது ''நம்பப்படுகிறவர்களின் உறுதியாக'' இருக்கிறது.

மக்கள் பெரும்பாலும் *விசுவாசம்* அல்லது *நம்பிக்கை* என்று அழைப்பது வேதாகமரீதியான விசுவாசம் அல்ல. அவர்கள் வானத்தின் இருண்ட மேகங்களைப் பார்த்து, ''மழைபெய்யப்போகிறது என்று நான் விசுவாசிக்கிறேன்'' என்று சொல்லலாம். ஆனால், மழை பெய்யும் என்ற நிச்சயம் அவர்களுக்கு இல்லை. மழை *பெய்யலாம்* என்பதற்கான சாத்தியக்கூறு இருப்பதை அவர்கள் காண்கிறார்கள். ஆனால் இது வேதாகமரீதியான விசுவாசம் இல்லை. வேதாமரீதியான விசுவாசத்தில்





சந்தேகத்துக்குக் கொஞ்சமும் இடமில்லை. தேவன் வாக்குத்தத்தம் செய்திருப்பதைவிட வேறொன்றுக்கு அது இடம் கொடுப்பதில்லை.

### விசுவாசம் காணப்படாதவைகளின் நிச்சயமாக இருக்கிறது

எபிரெயர் 11:1 வசனத்தில் காணப்படும் வரையறை விசுவாசமானது ''காணப்படாதவைகளின் நிச்சயமுமாயிருக்கிறது'' என்று சொல்லுகிறது. எனவே, நாம் ஒன்றைக் கண்டோ அல்லது நமது ஐம்புலன்களால் அதை உணரவோ செய்ய முடியுமானால் அங்கே விசுவாசம் தேவைப்படவில்லை.

இப்போதே ஒருவர் உங்களிடம் ''என்னால் விளக்க முடியாத சில காரணங்களுக்காக உன் கையில் ஒரு புத்தகம் இருக்கிறது என்று நான் விசுவாசிக்கிறேன்'' என்று சொல்லுகிறார் என்று வைத்துக் கொள்ளுவோம். அந்த நபருக்கு ஏதோ ஒன்று சரியில்லை என்றே நீங்கள் நினைப்பீர்கள். ''என் கையில் ஒரு புத்தகம் இருக்கிறது என்பதை உங்களால் தெளிவாகக் *காண* முடிகிறபடியால், என் கையில் ஒரு புத்தகம் இருக்கிறது என்று நீங்கள் *விசுவாசிக்க* வேண்டிய தேவையில்லையே'' என்று நீங்கள் சொல்லுவீர்கள்.

*விசுவாசம் என்பது காணப்படாதவைகளைக் குறித்ததாகும்.* எடுத்துக்காட்டாக, இந்த வார்த்தைகளை நான் எழுதிக்கொண்டிருக்கும் போது, எனக்கருகே ஒரு தேவதூதன் நின்றுகொண்டிருப்பதாக நான் விசுவாசிக்கிறேன். உண்மையில் இதைக்குறித்த நிச்சயம் எனக்கு உண்டு. நான் எப்படி இவ்வளவு நிச்சயமாக இருக்க முடியும்? நான் ஒரு தேவதூதனைப் பார்த்திருக்கிறேனா? இல்லை! ஒரு தேவதூதன் அருகில் பறப்பதை நான் உணர்ந்திருக்கிறேனா அல்லது கேட்டிருக்கிறேனா? இல்லை! நான் ஒரு தேவதூதனைப் பார்த்திருந்தாலோ, கேட்டிருந்தாலோ அல்லது உணர்ந்திருந்தாலோ எனக்கருகே ஒரு தேவதூதன் இருக்கிறான் என்பதை நான் விசுவாசிக்க வேண்டிய தேவையில்லை – நான் அதை *அறிந்திருக்கிறேன்.*

அப்படியானால் தேவதூதனின் பிரசன்னத்தைக் குறித்த நிச்சயத்தை எது எனக்குக் கொடுக்கிறது? தேவனுடைய வாக்குத்தத்தங்களில் ஒன்றிலிருந்தே நான் நிச்சயத்தைப் பெறுகிறேன். சங்கீதம் 34:7 வசனத்தில் அவர் ''கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி அவர்களை விடுவிக்கிறார்'' என்று வாக்குத்தத்தம் செய்திருக்கிறார். நான் விசுவாசிப்பதற்குத் தேவனுடைய வார்த்தையைத் தவிர வேறு நிரூபணம் கிடையாது. இதுவே மெய்யான வேதாகமரீதியான விசுவாசமாகும் – ''காணப்படாதவைகளின் நிச்சயமாகும்.'' ''பார்த்தால் விசுவாசிக்கலாம்'' என்ற வார்த்தையை உலகத்தார் அடிக்கடி பயன்படுத்துகிறார்கள். ஆனால் தேவனுடைய ராஜ்யத்தில் இதற்கு எதிர்மாறானதே உண்மையாகும்: ''விசுவாசிப்பதே பார்ப்பதாகும்.''

தேவனுடைய ஒரு வாக்குத்தத்தத்தில் நாம் விசுவாசம் வைக்கும் போது, நாம் பெரும்பாலும் நம்மைச் சந்தேகப்பட வைக்கும் சூழ்நிலை களை எதிர்நோக்குகிறோம். அல்லது நமது சூழ்நிலைகள் மாறாதபடியால், தேவன் தமது வாக்குத்தத்தத்தை நிறைவேற்ற வில்லையோ என்று நினைக்க வைக்கும் காலகட்டத்தைக் கடந்து செல்லுகிறோம். இப்படிப்பட்ட வேளைகளில் நாம் சந்தேகத்தை எதிர்த்து நின்று, நமது விசுவாசத்தைக் காத்துக்கொண்டு, நமது இருதயத்தில் தேவன் எப்போதுமே தமது வாக்குத்தத்தங்களை நிறைவேற்றுவார் என்ற நிச்சயத்தோடு இருக்க வேண்டும். அவரால் பொய் சொல்ல முடியாது (பார்க்க, தீத்து 1:2).

## நாம் விசுவாசத்தைப் பெறுவது எப்படி?

விசுவாசமானது முழுவதுமாகத் தேவனுடைய வாக்குத்தத்தங் களை அடிப்படையாகக் கொண்டிருக்கிறபடியால், தேவனுடைய வார்த்தை மட்டுமே வேதாகமரீதியான விசுவாசத்துக்கு ஆதாரமாக இருக்கிறது. ரோமர் 10:17 வசனம் ''ஆதலால் *விசுவாசம் கேள்வி யினாலே வரும்*, கேள்வி தேவனுடைய வசனத்தினாலே வரும்'' என்று சொல்லுகிறது (ரோமர் 10:17 அழுத்தம் கொடுக்கப்பட்டுள்ளது). தேவனுடைய வார்த்தை அவருடைய சித்தத்தை வெளிப்படுத்துகிறது. தேவனுடைய சித்தத்தை நாம் அறியும்போது மட்டுமே அதை விசுவாசிக்க முடியும்.

எனவே, நீங்கள் விசுவாசத்தைப் பெற வேண்டுமானால், தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் கேட்க (அல்லது வாசிக்க) வேண்டும். ஜெபிப்பதின்மூலமாகவோ, உபவாசத்தின்மூலமாகவோ, ஒருவர் அதற்காக உங்கள் தலைமீது கைவைத்து ஜெபிப்பதினாலோ விசுவாசத்தைப் பெற முடியாது. தேவனுடைய வார்த்தையைக் கேட்பதினால் மட்டுமே அது வருகிறது. நீங்கள் அதைக் கேட்கும் போது, அதை விசுவாசிப்பதற்கான தீர்மானத்தை எடுக்க வேண்டும்.

விசுவாசத்தைப் பெறுவது மட்டுமில்லாமல் நமது விசுவாசம் வளர்ச்சிபெறவும் முடியும். விசுவாசத்தின் பல்வேறு மட்டங்களைக் குறித்து வேதாகமம் குறிப்பிடுகிறது – அற்ப விசுவாசத்திலிருந்து மலைகளையே அசைக்கக்கூடிய விசுவாசம் வரையில்! மானிடத் தசையைப் போலவே விசுவாசத்துக்குப் போஷித்து செயல்பயிற்சி அளிக்கும்போது அது வளருகிறது. தேவனுடைய வார்த்தையைத் தொடர்ந்து தியானிப்பதின்மூலம் நாம் நமது விசுவாசத்துக்குப் போஷாக்களிக்க வேண்டும். தேவனுடைய வார்த்தையின் அடிப்படை யிலேயே ஒவ்வொன்றையும் செய்து, அல்லது பதில்வினை செய்து அதற்குச் செயல்பயிற்சி கொடுக்கலாம். பிரச்சினைகள், கவலைகள், கரிசனைகளை நாம் எதிர்நோக்கும் வேளைகளிலும்கூட இப்படியே





செய்ய வேண்டும். தமது பிள்ளைகள் எதற்காகவும் கவலைப்படுவதைத் தேவன் விரும்பவில்லை. எல்லாச் சூழ்நிலைகளிலும் நாம் அவர்மீது நம்பிக்கை வைத்திருப்பதையே அவர் விரும்புகிறார் (பார்க்க, மத். 6:25–34; பிலி. 4:6–8; 1 பேதுரு 5:7). கவலைப்பட மறுப்பதின் மூலம் நாம் நமது விசுவாசத்தைச் செயல்படுத்த முடியும்.

தேவன் கூறியிருப்பதை நாம் மெய்யாகவே விசுவாசிப்போமானால், அது உண்மை என்பதுபோல நாம் நடப்போம், பேசுவோம். இயேசு தேவனுடைய குமாரன் என்று நீங்கள் விசுவாசிப்பீர்களானால், அதை விசுவாசிக்கும் ஒரு நபரைப்போல நீங்கள் நடப்பீர்கள், பேசுவீர்கள். தேவன் உங்கள் தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பார் என்று நீங்கள் விசுவாசிப்பீர்களானால், அதற்கேற்றதுபோல நடப்பீர்கள், பேசுவீர்கள். நீங்கள் ஆரோக்கியமாக இருக்க வேண்டுமென்று தேவன் விரும்புகிறார் என்று நீங்கள் விசுவாசிப்பீர்களானால், அதைப்போல நீங்கள் நடப்பீர்கள், பேசுவீர்கள். மோசமான சூழ்நிலைகளின் மத்தியிலும்கூட, தேவன் மீதான தங்கள் விசுவாசத்தைச் செயல்படுத்தி, அற்புதங்களைப் பெற்றுக் கொண்டவர்களைக் குறித்த பல நிகழ்ச்சிகள் வேதாகமத்தில் கொடுக்கப் பட்டுள்ளன. சில எடுத்துக்காட்டுகளை நாம் இந்த அத்தியாயத்திலும், சில எடுத்துக்காட்டுகளை தெய்வீக குணமளித்தல் பற்றிய அடுத்த அத்தியாயத்திலும் பார்ப்போம். (மேலும் சில நல்ல எடுத்துக்காட்டு களுக்காகப் பார்க்க, 2 இரா. 4:1–7; மாற்கு 5:25–34; லூக்கா 19:1–10; அப். 14:7–19).

## விசுவாசம் இருதயத்தில் செயல்படுகிறது

வேதாகமரீதியான விசுவாசம் நமது மனதில் அல்ல இருதயத்தில் செயல்படுகிறது. ''நீதியுண்டாக இருதயத்திலே விசுவாசிக்கப்படும்'' என்று பவுல் எழுதியிருக்கிறார் (ரோமர் 10:10). இயேசுவானவர் இப்படிச் சொல்லுகிறார்:

> எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று *தன் இருதயத்தில் சந்தேகப்படாமல்* விசுவாசித்தால், அவன் சொன்ன படியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன் (மாற்கு 11:23 அழுத்தம் கொடுக்கப் பட்டுள்ளது).

உங்கள் மூளையில் சந்தேகங்கள் இருந்தாலும், உங்கள் இருதயத்தில் நீங்கள் விசுவாசத்தைக் கொண்டிருப்பீர்களானால், தேவன் வாக்குத்தத்தம் செய்திருப்பதைப் பெற்றுக்கொள்ளுவீர்கள். உண்மை யில், தேவனுடைய வாக்குத்தத்தங்களை விசுவாசிக்கும்படி நாம் தீர்மானிக்கும் பல வேளைகளில், நமது மனமானது, சரீரப்பிரகாரமான

உணர்வுகளாலும், சாத்தானின் பொய்களாலும் சந்தேகப்படும்படி தாக்கப்படுகிறது. இந்த வேளையில் சந்தேகத்தை உண்டாக்கும் சிந்தனைகளுக்குப் பதிலாகத் தேவனுடைய வாக்குத்தத்தங்களை நாம் நினைத்துக்கொள்ள வேண்டும். அசைவில்லாமல் விசுவாசத்தை உறுதியாகப் பற்றிக்கொள்ள வேண்டும்.

## விசுவாசத்தைக் குறித்த பொதுவான தவறுகள்

சில வேளைகளில் நாம் தேவன்மீதான விசுவாசத்தைச் செயல்படுத்த முயலும்போது, தேவனுடைய வார்த்தையின்படி செயல் படாதபடியால், நாம் விரும்பியதைப் பெற முடியாமல் இருக்கிறோம். தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்திராத ஒன்றை நாம் விசுவாசிப்பதே பொதுவான தவறாகக் காணப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, திருமணமான தம்பதியர் பிள்ளைகளுக்காகத் தேவன்மீது விசுவாசம் வைத்திருக்க முடியும். ஏனென்றால் அவர்கள் உறுதியாக நிற்பதற்குத் தேவனுடைய வார்த்தையில் ஒரு வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டிருக்கிறது. நான் அறிந்த சில தம்பதியரிடம் அவர்களுக்கு ஒருபோதும் பிள்ளை பிறக்காது என்று மருத்துவர்கள் சொல்லியிருப்பதை நான் அறிவேன். என்றாலும், அவர்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ள இரண்டு வாக்குத்தத்தங்களையும் விசுவாசித்து, தேவன்மீதுள்ள விசுவாசத்தில் தரித்திருப்பதைத் தெரிந்து கொண்டார்கள். இப்போது அவர்கள் ஆரோக்கியமான பிள்ளைகளின் பெற்றோராக இருக்கிறார்கள்:

> உங்கள் தேவனாகிய கர்த்தரையே சேவிக்கக்கடவீர்கள்; அவர் உன் அப்பத்தையும் உன் தண்ணீரையும் ஆசீர்வதிப்பார். வியாதியை உன்னிலிருந்து விலக்கு வேன். கர்ப்பம் விழுகிறதும் மலடும் உன் தேசத்தில் இருப்பதில்லை; உன் ஆயுசு நாட்களைப் பூரணப் படுத்துவேன் [யாத். 23:25–26].

> சகல ஜனங்களைப் பார்க்கிலும் நீ ஆசீர்வதிக்கப் பட்டிருப்பாய்; உங்களுக்குள்ளும் உங்கள் மிருக ஜீவன்களுக்குள்ளும் ஆணிலாகிலும் பெண்ணினா கிலும் மலடிருப்பதில்லை [உபா. 7:14].

பிள்ளைகளில்லாத தம்பதியருக்கு இந்த வாக்குத்தத்தங்கள் ஊக்கமளிக்க வேண்டும்! ஆனால் குறிப்பாக ஒரு ஆண்பிள்ளைக் காகவோ அல்லது பெண் பிள்ளைக்காகவோ விசுவாசிப்பது வேறு காரியமாகும். நமது வருங்காலப் பிள்ளைகள் யாராக இருக்க வேண்டும் என்பது குறித்த வாக்குத்தத்தங்கள் வேதாகமத்தில் கொடுக்கப்பட வில்லை. நமது விசுவாசம் ஆற்றலுடையதாக இருக்க வேண்டுமானால் நாம் வேதவசனங்களின் எல்லைக்குள்ளாக இருக்க வேண்டும். தேவன்





நமக்கு எதை வாக்குத்தத்தமாக அருளியிருக்கிறாரோ அதற்காக மட்டுமே நாம் தேவன்மீது விசுவாசம் வைக்க முடியும்.

தேவனுடைய வார்த்தையிலிருந்து நாம் ஒரு வாக்குத்தத்தத் தையும் அந்த வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் நாம் எதை விசுவாசிக்கலாம் என்பதையும் பார்ப்போம்:

> ஏனெனில், கர்த்தர்தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கிவருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப் பார்கள் [1 தெச. 4:16].

இந்த வசனத்தின் அடிப்படையில் இயேசு மறுபடியும் திரும்ப வருவார் என்பதை நாம் நிச்சயமாக விசுவாசிக்க முடியும்.

என்றாலும், இயேசுவானவர் நாளையே திரும்பிவருவார் என்ற விசுவாசத்தோடு நாம் ஜெபிக்க முடியுமா? முடியாது. ஏனென்றால் இந்த வேதவசனமோ அல்லது வேறு வேத வசனமோ அதை வாக்குத்தத்த மாகச் சொல்லவில்லை. உண்மையில், தாம் திரும்பிவரும் நாளையும் வேளையையும் எவரும் அறிய மாட்டார்கள் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கிறார்.

ஆனால் இயேசுவானவர் நாளை திரும்பி வருவார் என்ற *நம்பிக்கையோடு* நம்மால் ஜெபிக்க முடியும். ஆனால் அது நடக்கும் என்ற உத்திரவாதம் நமக்குக் கிடையாது. நாம் விசுவாசத்தில் ஜெபிக்கும்போது, நாம் எதற்காக ஜெபிக்கிறோமே அது நடக்கும் என்ற நிச்சயம் நமக்கு உண்டு; ஏனென்றால் அதுகுறித்த தேவனுடைய வாக்குத்தத்தத்தை நாம் பெற்றிருக்கிறோம்.

இதே வசனத்தின் அடிப்படையில், இயேசுவானவர் திரும்பி வரும்போது மரித்த விசுவாசிகளின் சரீரங்கள் உயிரோடு எழுப்பப்படும் என்று நாம் விசுவாசிக்க முடியும். கிறிஸ்து வரும்போது உ.யிரோடிருக்கும் நாமும் ''கிறிஸ்துவில் மரித்தவர்கள்'' புதிய சரீரத்தைப் பெறும் அதே வேளையிலோ அல்லது அதற்கு முன்பாகவோ புதிய சரீரத்தைப் பெறுவோம் என்று விசுவாசிக்க முடியுமா? முடியாது, ஏனென்றால் இதற்கு நேர் எதிர்மாறானதையே வேதவசனம் வாக்குத் தத்தமாகச் சொல்லுகிறது. ''கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்'' என்றே சொல்லப்பட்டிருக்கிறது. உண்மையில் அடுத்த வசனம் தொடர்ந்து, ''பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடே கூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு...'' என்று சொல்லுகிறது [1 தெச. 4:17]. எனவே கிறிஸ்துவில் மரித்தவர்களே முதலில் புதிய சரீரத்தைப் பெறுவார்கள். தேவனுடைய வார்த்தை அதை வாக்குத்தத்தம் செய்கிறது.

ஏதேனும் ஒன்றுக்காக நாம் தேவன்மீது நம்பிக்கை வைக்கப் போகிறோம் என்றால் நாம் விரும்புவதைப் பெறுவது தேவனுடைய சித்தமா என்பதை நாம் உறுதிப்படுத்திக்கொள்ள வேண்டும். வேதாகமத்தில் தேவனுடைய வாக்குத்தத்தத்தை நாம் ஆராய்ந்து பார்க்கும்போது மட்டுமே தேவனுடைய சித்தத்தைப் பாதுகாப்பாகத் தீர்மானிக்க முடியும்.

இயற்கை உலகத்திலும் விசுவாசம் இதே வகையில்தான் கிரியை செய்கிறது., நாளை மதியம் ஒரு மணிக்கு உங்கள் வீட்டுக்கு வருவதாக நான் வாக்குக் கொடுத்திராவிட்டால், நாளை நான் வருவேன் என்று நீங்கள் விசுவாசிப்பது மூடத்தனமாகும்.

தரித்திருப்பதற்கு ஒரு வாக்குத்தத்தம் இல்லாத விசுவாசம் உண்மையில் விசுவாசம் அல்ல, அது மூடத்தனமாகும். எனவே தேவனிடம் நீங்கள் எதற்காகவாவது வேண்டிக்கொள்ளுவதற்கு முன்பாக, நான் விரும்புவதை வேதாகமத்திலுள்ள எந்த வசனம் வாக்குத்தத்தமாகக் கொடுக்கிறது என்ற கேள்வியை உங்களுக்கு நீங்களே கேட்டுக் கொள்ளுங்கள். ஒரு வாக்குத்தத்தம் இல்லாவிட்டால் உங்கள் விசுவாசத்துக்கு அஸ்திபாரம் இல்லை.

## இரண்டாவது பொதுவான தவறு

பல வேளைகளில் தேவனுடைய வாக்குத்தத்தம் நிறைவேறுவதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றாமல் கிறிஸ்தவர்கள் அந்த வாக்குத்தத்தம் தங்கள் வாழ்க்கையில் நிறைவேறும் என்று நம்பிக்கை வைக்க முயலுகிறார்கள். எடுத்துக்காட்டாகக் கிறிஸ்தவர்கள் 37ஆம் சங்கீதத்தை அடிப்படையாகக் கொண்டு இப்படிச் சொல்லுவதை நான் கேட்டிருக்கிறேன்: ‘‘தேவன் என் இருதயத்தின் வேண்டுதல்களை எனக்கு அருள்செய்வார் என்று வேதாகமம் சொல்லுகிறது. இதையே நான் விசுவாசிக்கிறேன்.’’

என்றாலும், தேவன் உங்கள் இருதயத்தின் வேண்டுதல்களை அருல்செய்வார் என்று மட்டும் வேதாகமம் சொல்லவில்லை. அது சொல்லுவதைப் பாருங்கள்:

> பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே; நியாயக்கேடு செய்கிறவர்கள்மேல் பொறாமை கொள்ளாதே. அவர்கள் புல்லைப்போல் சீக்கிரமாய் அறுப்புண்டு, பசும் பூண்டைப்போல் வாடிப்போவார்கள். கர்த்தரை நம்பி நன்மை செய்; தேசத்தில் குடியிருந்து சத்தியத்தை மேய்ந்துகொள். கர்த்தரிடத்தில் மனமகிழ்ச்சியாயிரு; அவர் உன் இருதயத்தின் வேண்டுதல்களை உனக்கு அருள்செய்வார். ˙உன் வழியைக் கர்த்தருக்கு ஒப்புவித்து, அவர்மேல் நம்பிக்கையாயிரு; அவரே காரியத்தை வாய்க்கப்பண்ணுவார் [சங். 37:1—5].





தேவன் நமது இருதயத்தின் வேண்டுதல்களை நமக்கு அருள் செய்வார் என்று நாம் விசுவாசிக்க வேண்டுமானால், பல நிபந்தனைகளை நிறைவேற்ற வேண்டும். மேலேயுள்ள வாக்குத்தத்தத்தில் குறைந்த பட்சம் எட்டு நிபந்தனைகள் இருப்பதை நான் எண்ணியிருக்கிறேன். இந்த நிபந்தனைகளை நாம் நிறைவேற்றாவிட்டால், வாக்குப்பண்ணப்பட்ட ஆசீர்வாதத்தை ஏற்றுக்கொள்ள நமக்கு உரிமை கிடையாது. நமது விசுவாசத்துக்கு அஸ்திபாரம் இல்லை.

பிலிப்பியர் 4:19 வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தையும் கிறிஸ்தவர்கள் அடிக்கடி மேற்கோளாக எடுத்துச் சொல்லுகிறார்கள்: ‘‘என் தேவன் தம்முடைய ஐசுவரியத்தின்படி உங்கள் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார்.’’ என்றாலும், இந்த வாக்குத்தத்தத்துக்கு நிபந்தனைகள் இருக்கின்றனவா? இருக்கின்றன!

பிலிப்பியர் 4:19 வசனத்தில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தத்தின் பின்னணியை நீங்கள் ஆராய்ந்து பார்ப்பீர்களானால், அது எல்லாக் கிறிஸ்தவர்களுக்கும் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தம் அல்ல என்பதைக் கண்டுகொள்ளுவீர்கள். மாறாக, கொடுப்பவர்களாக இருக்கும் கிறிஸ்தவர்களுக்கு அந்த வாக்குத்தத்தம் கொடுக்கப்பட்டுள்ளது. பிலிப்பியர் அப்போதுதான் தனக்குக் காணிக்கை அனுப்பியிருந்தபடியால், தேவன் அவர்களுடைய தேவைகள் எல்லாவற்றையும் சந்திப்பார் என்பதைப் பவுல் அறிந்திருந்தார். இயேசுவானவர் கட்டளையிட்டபடி அவர்கள் தேவனுடைய ராஜ்யத்தைத் தேடினபடியால், இயேசுவானவர் வாக்குத்தத்தம் செய்தபடி, தேவன் அவர்களுடைய தேவைகளைச் சந்திப்பார் [பார்க்க, மத். 6:33]. தேவன் நமது பொருளாதாரத் தேவைகளைச் சந்திப்பார் என்று வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள வாக்குத்தத்தங்களில் பல முதலில் நாம் கொடுப்பவர்களாக இருக்க வேண்டும் என்ற நிபந்தனையைக் கொண்டுள்ளன.

நமது பணத்தைக் குறித்த தேவனுடைய கட்டளைகளுக்கு நாம் கீழ்ப்படியாமல் அவர் நம்முடைய தேவைகளைச் சந்திப்பார் என்று அவரை விசுவாசிக்க நமக்கு உரிமை கிடையாது. பழைய உடன்படிக்கையின்படி மக்கள் தங்கள் தசமபாகத்தைக் கொடுக்காதபடியினால்தான் சபிக்கப்பட்டிருக்கிறார்கள் என்று தேவன் அவர்களிடம் சொன்னார். அவர்கள் தங்கள் தசமபாகங்களையும் காணிக்கைகளையும் ஒழுங்காகக் கொடுப்பார்களானால், நாம் அவர்களை ஆசீர்வதிப்பதாக அவர் வாக்குத்தத்தம் அருளியிருக்கிறார் [பார்க்க, மல். 3:8—12].

வேதாகமத்தில் கொடுக்கப்பட்டுள்ள பல வாக்குத்தத்தங்கள் நாம் தேவனுக்குக் கீழ்ப்படிந்தால் மட்டுமே நமக்குரியவைகளாக இருக்கின்றன. எனவே ஏதேனும் ஒன்றுக்காக நாம் தேவன்மீது விசுவாசம் வைப்பதற்கு முன்பாக, ‘‘அந்த வாக்குத்தத்தத்தோடு வரும் எல்லா

நிபந்தனைகளையும் நான் நிறைவேற்றியிருக்கிறேனா?'' என்று கேட்டுக் கொள்ள வேண்டும்.

### மூன்றாவது பொதுவான தவறு

நாம் ஒவ்வொரு முறை ஜெபிக்கும்போதும், ஏதாவது ஒன்றுக்காக வேண்டிக்கொள்ளும்போதும் நிறைவேற்ற வேண்டிய ஒரு நிபந்தனையை இயேசுவானவர் புதிய ஏற்பாட்டில் சொல்லியிருக்கிறார்:

> இயேசு அவர்களை நோக்கி: தேவனிடத்தில் விசுவாச முள்ளவர்களாயிருங்கள். எவனாகிலும் இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து, சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொல்லி, தான் சொன்னபடியே நடக்கும் என்று தன் இருதயத்தில் சந்தேகப்படாமல் விசுவாசித்தால், அவன் சொன்னபடியே ஆகும் என்று மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன். ஆதலால், *நீங்கள் ஜெபம்பண்ணும்போது எவைகளைக் கேட்டுக்கொள்வீர்களோ, அவைகளைப் பெற்றுக் கொள்வோம் என்று விசுவாசியுங்கள், அப்பொழுது அவைகள் உங்களுக்கு உண்டாகும்* என்று சொல்லுகிறேன் [மாற்கு 11:22–24].

நாம் எவைகளுக்காக ஜெபிக்கிறோமோ அவைகளைப் பெற்றுக்கொள்ளுவதாக விசுவாசிக்க வேண்டும் என்பதே இயேசுவானவர் கொடுத்துள்ள நிபந்தனையாகும். பல கிறிஸ்தவர்கள் தங்கள் ஜெபத்துக்குப் பதிலைக் காணும்போது, தாங்கள் பெற்றுக் கொண்டதாக விசுவாசிப்பதின்மூலம் தங்கள் விசுவாசத்தைச் செயல்படுத்தத் தவறாக முயலுகிறார்கள். நாம் எவைகளுக்காக ஜெபிக்கிறோமோ அவைகளை ஏற்கெனவே பெற்றுக்கொண்டதாக நாம் விசுவாசிக்க வேண்டும்.

தேவன் நமக்கு வாக்குத்தத்தம் செய்துள்ள ஒன்றுக்காக நாம் அவரிடம் ஜெபிக்கும்போது, *நாம் ஜெபிக்கும்போதே* அந்த ஜெபத்துக்கான பதிலைப் பெற்றுக்கொண்டதாக விசுவாசித்து, அப்போதே பதிலுக்காக தேவனுக்கு நன்றிகூறத் துவங்க வேண்டும். பதிலைக் கண்ட *பிறகு* அல்ல, அதைக் காண்பதற்கு *முன்பாகவே* அதை நாம் பெற்றுவிட்டதாக விசுவாசிக்க வேண்டும். நாம் ஸ்தோத்திரத்தோடு கூட நமது ஜெபங்களைத் தேவனிடம் ஏறெடுக்க வேண்டும் என்று பவுல் சொல்லியிருக்கிறார்:

> நீங்கள் ஒன்றுக்குங் கவலைப்படாமல், எல்லா வற்றையுங்குறித்து உங்கள் விண்ணப்பங்களை ஸ்தோத் திரத்தோடே கூடிய ஜெபத்தினாலும் வேண்டுதலினாலும் தேவனுக்குத் தெரியப்படுத்துங்கள் [பிலி. 4:6].





நான் ஏற்கெனவே குறிப்பிட்டபடி, நாம் நமது இருயத்தில் விசுவாசிப்போமானால், இயல்பாகவே நமது வார்த்தைகளும், செயல்களும் நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதற்கு ஏற்றபடியாகவே இருக்கும். இயேசுவானவர் ''இருதயத்தின் நிறைவினால் வாய் பேசும்'' என்று சொல்லியிருக்கிறார் [மத். 12:34].

சில கிறிஸ்தவர்கள் ஒரே காரியத்துக்காக மறுபடியும் மறுபடியுமாக ஜெபிக்கும் தவறைச் செய்கிறார்கள். அதாவது அவர்கள் பெற்றுக் கொண்டதாக இன்னும் விசுவாசிக்கவில்லை என்பதையே இது வெளிப்படுத்துகிறது. நாம் ஜெபிக்கும்போது பெற்றுக்கொண்டதாக விசுவாசிப்போமானால், பிறகு அதே வேண்டுகோளை மறுபடியுமாக ஏறெடுக்க வேண்டிய அவசியமில்லை. ஒரே காரியத்தை நாம் மறுபடியும் மறுபடியுமாகக் கேட்பது தேவன் முதன்முறை நமது ஜெபத்தைக் கேட்டிருப்பாரா என்று சந்தேகப்படுவதை வெளிப்படுத்துகிறது.

### இயேசுவானவர் ஒரே வேண்டுகோளை ஒன்றுக்கு மேலான தடவைகள் ஏறெடுக்கவில்லையா?

ஆனால் இயேசுவானவர் கெத்செமனே தோட்டத்தில் ஜெபித்துக் கொண்டிருந்தபோது ஒரே விண்ணப்பத்தை மூன்று முறை ஏறெடுத்தார் [பார்க்க, மத். 26:39–44]. ஆனால் அவர் தேவனுடைய வெளிப்படுத்தப் பட்ட சித்தத்துக்கு ஏற்ப விசுவாசத்தில் ஜெபிக்கவில்லை என்பதைக் கருத்தில் கொள்ளுங்கள். உண்மையில், அவர் சிலுவையிலிருந்து தப்ப முடியுமா என்பதற்காகவே மூன்று முறை ஜெபித்தார். தனது வேண்டுகோள் தேவனுடைய சித்தத்துக்கு விரோதமானது என்பதை அவர் அறிந்திருந் தார். எனவேதான் அவர் ஒரே ஜெபத்தில் மூன்று முறை பிதாவின் சித்தத்துக்குத் தம்மை ஒப்புக்கொடுத்தார்.

இயேசுவானவரின் இந்த ஜெபம் சில வேளைகளில் *எல்லா* ஜெபங்களுக்கும் மாதிரியாகத் தவறாகப் பயன்படுத்தப்படுகிறது. நாம் இயேசுவானவரின் ஜெபத்தைப் பின்பற்றி, எப்போதுமே நமது ஜெபத்தை ''உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது'' என்று முடிக்க வேண்டும் என்று அவர்கள் போதிக்கிறார்கள்.

ஆனால் இயேசுவானவர் தமது விண்ணப்பம் தேவனுடைய சித்தத்துக்கு விரோதமானது என்று அறிந்த ஒரு ஜெபத்தை ஏறெடுக்கிறார் என்பதை நாம் நினைவில் வைத்திருக்க வேண்டும். நாம் தேவனுடைய சித்தத்தின்படி ஜெபிக்கும்போது அவருடைய மாதிரியைப் பின்பற்று வோமானால் அது தவறாகும், அது விசுவாசக் குறைவையே வெளிப் படுத்துகிறது. எடுத்துக்காட்டாக, ''ஆண்டவரே, நான் என் பாவங்களை உம்மிடம் அறிக்கையிடுகிறேன். அது உமக்குச் சித்தமானால் என்னை மன்னிக்கும்படி உம்மிடம் வேண்டுகிறேன்'' என்று நாம் ஜெபிப் போமானால், எனது பாவங்களை மன்னிப்பது தேவனுடைய சித்தமாக

இல்லாமலுமிருக்கலாம் என்பதை அது சுட்டிக்காட்டுகிறது. ஆனால் நாம் நமது பாவங்களை அறிக்கையிடும்போது, அவைகளை மன்னிப்பதாகத் தேவன் வாக்குத்தத்தம் செய்திருக்கிறார் என்பதை நாம் நிச்சயமாக அறிவோம் [பார்க்க, 1 யோவான் 1:9]. எனவே இப்படிப்பட்ட ஒரு ஜெபம் தேவனுடைய வெளிப்படுத்தப்பட்டுள்ள சித்தத்தின்மீது ஒருவர் விசுவாசத்தில் குறைவுபடுவதையே வெளிப்படுத்தும்.

இயேசுவானவர் எல்லா ஜெபத்தையும் ''உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது'' என்று முடிக்கவில்லை. அவர் இப்படி ஜெபித்ததற்கு ஒரே எடுத்துக்காட்டே இருக்கிறது. அந்த வேளையில் தாம் அதனால் சகிக்க வேண்டியிருக்கும் பாடுகளை அறிந்து, அவர் தம்மைத்தாமே பிதாவின் சித்தத்துக்கு ஒப்புக்கொடுத்தார்.

இதே வேளையில், நாம் ஒரு குறிப்பிட்ட சூழ்நிலையைக் குறித்துத் தேவனுடைய வெளிப்படுத்தப்பட்ட சித்தத்தை அறியாவிட்டால், நமது ஜெபங்களை ''உம்முடைய சித்தத்தின்படி ஆகக்கடவது'' என்ற வார்த்தைகளோடு முடிப்பது பொருத்தமாக இருக்கும். யாக்கோபு இப்படி எழுதியிருக்கிறார்:

> மேலும், நாங்கள் இன்றைக்கு அல்லது நாளைக்கு இன்ன பட்டணத்திற்குப் போய், அங்கே ஒரு வருஷம் தங்கி, வியாபாரஞ்செய்து, சம்பாத்தியம்பண்ணுவோ மென்கிறவர்களே, கேளுங்கள். நாளைக்கு நடப்பது உங்களுக்குத் தெரியாதே. உங்கள் ஜீவன் எப்படிப்பட்டது? கொஞ்சக்காலந் தோன்றிப் பின்பு தோன்றாமற்போகிற புகையைப் போலிருக்கிறதே. ஆதலால்: ஆண்டவருக்குச் சித்தமானால், நாங்களும் உயிரோடிருந்தால், இன்னின்னதைச் செய்வோம் என்று சொல்ல வேண்டும். இப்பொழுது உங்கள் வீம்புகளில் மேன்மைபாராட்டுகிறீர்கள்; இப்படிப்பட்ட மேன்மைபாராட்டல் யாவும் பொல்லாங்காயிருக்கிறது [யாக். 4:13–16].

தேவனுடைய வாக்குத்தத்தத்தின் அடிப்படையில் நாம் நமது விண்ணப்பத்தை ஏறெடுத்துவிட்டு, அதற்கான நிபந்தனைகளை நிறைவேற்றிய பின்னர் நாம் என்ன செய்ய வேண்டும்? அது உண்மை யில் நடக்கும் வரையில் பெற்றுக்கொண்டதாக நாம் விசுவாசித்திருக் கும் பதிலுக்காகத் தொடர்ந்து தேவனை ஸ்தோத்திரித்துக் கொண்டிருக்க வேண்டும். விசுவாசத்தினாலும் பொறுமையினாலுமே நாம் தேவனுடைய வாக்குத்தத்தங்களைச் சுதந்தரித்துக் கொள்ளு கிறோம் [எபி. 6:12]. சந்தேகங்களை அனுப்புவதின்மூலம் சாத்தான் நம்மைத் தோற்கடிக்க முயலுவான். நமது மனம் ஒரு போர்க்களம் என்பதை நாம் உணர வேண்டும். நமது மனதைச் சந்தேகத்தின்





எண்ணங்களை தாக்கும்போது, தேவனுடைய வாக்குத்தத்தங்களைக் குறித்து சிந்தனைகளை அதற்குப் பதிலாக நினைத்து, தேவனுடைய வார்த்தையை விசுவாசத்தில் பேச வேண்டும். இப்படிச் செய்யும்போது சாத்தான் ஓடிப்போவான் [பார்க்க, யாக். 4:7; 1 பேதுரு 5:8–9].

## செயல்படும் விசுவாசத்துக்கு ஒரு எடுத்துக்காட்டு

செயல்படும் விசுவாசத்துக்கு ஒரு அற்புதமான எடுத்துக்காட்டு பேதுரு தண்ணீரின்மீது நடப்பதாகும். இந்த நிகழ்ச்சியை நாம் வாசித்து, இதிலிருந்து என்ன பாடத்தைக் கற்றுக்கொள்ள முடியும் என்பதைப் பார்ப்போம்:

> இயேசு ஜனங்களை அனுப்பிவிடுகையில், தம்முடைய சீஷர்கள் படவில் ஏறி, தமக்கு முன்னே அக்கரைக்குப் போகும்படி அவர்களைத் துரிதப்படுத்தினார். அவர் ஜனங்களை அனுப்பிவிட்ட பின்பு, தனித்து ஜெபம் பண்ண ஒரு மலையின்மேல் ஏறி, சாயங்காலமானபோது அங்கே தனிமையாயிருந்தார். அதற்குள்ளாகப் படவு நடுக்கடலிலே சேர்ந்து, எதிர்க்காற்றாயிருந்தபடியால் அலைகளினால் அலைவுபட்டது. இரவின் நாலாம் ஜாமத்திலே, இயேசு கடலின்மேல் நடந்து, அவர்களிடத்திற்கு வந்தார். அவர் கடலின்மேல் நடக்கிறதைச் சீஷர்கள் கண்டு, கலக்கமடைந்து, ஆவேசம் என்று சொல்லி, பயத்தினால் அலறினார்கள். உடனே இயேசு அவர்களோடே பேசி: திடன் கொள்ளுங்கள், நான்தான் பயப்படாதிருங்கள் என்றார். பேதுரு அவரை நோக்கி: ஆண்டவரே! நீரேயானால் நான் ஜலத்தின்மேல் நடந்து உம்மிடத்தில் வரக் கட்டளையிடும் என்றான். அதற்கு அவர்: வா என்றார். அப்பொழுது, பேதுரு படவை விட்டிறங்கி, இயேசு வினிடத்தில் போக ஜலத்தின்மேல் நடந்தான். காற்று பலமாயிருக்கிறதைக் கண்டு, பயந்து, அமிழ்ந்து போகையில்: ஆண்டவரே, என்னை ரட்சியும் என்று கூப்பிட்டான். உடனே இயேசு கையை நீட்டி அவனைப் பிடித்து: அற்ப விசுவாசியே, ஏன் சந்தேகப்பட்டாய் என்றார். அவர்கள் படவில் ஏறினவுடனே காற்று அமர்ந்தது. அப்பொழுது, படவில் உள்ளவர்கள் வந்து: மெய்யாகவே நீர் தேவனுடைய குமாரன் என்று சொல்லி, அவரைப் பணிந்துகொண்டார்கள் [மத். 14:22–33].

ஏற்கெனவே இயேசுவின் சீஷர்கள் கலிலேயாக் கடலில் கடுமையான புயலில் சிக்கிக் கொண்டிருந்தார்கள் [பார்க்க, மத். 8:23–

27]. அப்போது இயேசு அவர்களுடனேகூட இருந்தார். மேலும் அவர் புயலை அடக்கினார். பிறகு அவர் தமது சீஷர்களின் விசுவாசக் குறைவுக்காக அவர்களைக் கடிந்துகொண்டார். அவர்கள் அந்தப் பயணத்தில் புறப்படுவதற்கு முன்பாக, அக்கரைக்குச் செல்லுவது தமது சித்தம் என்று அவர் அவர்களிடம் சொல்லியிருந்தார் [பார்க்க, மாற்கு 4:35]. ஆனால் புயல் எழுந்தபோதோ அவர்கள் தங்கள் சூழ்நிலை யினால் அவர்கள் அச்சுறுத்தப்பட்டார்கள். ஒரு கட்டத்தில் தாங்கள் மரித்துப்போவோமோ என்றுகூட அவர்கள் பயப்பட்டார்கள். குறைந்தபட்சம் அவர்கள் பயப்படாமலாவது இருக்க வேண்டுமென்று இயேசு எதிர்பார்த்தார்.

இந்த முறை அவர்களாகவே கலிலேயாக் கடலைக் கடந்து செல்லும்படி இயேசுவானவர் அனுப்பினார். அவர் அப்படிச் செய்யும்படி பரிசுத்த ஆவியானவரால் வழிநடத்தப்பட்டிருந்தார் என்பதும், அன்றிரவு ஒரு எதிர்க்காற்று தாக்கும் என்பதைத் தேவன் அறிந்திருந்தார் என்பதும் நிச்சயமாகும். இப்படியாக அவர்கள் தங்கள் விசுவாசத்துக்கு எதிரான சிறிய அறைகூவலை எதிர்நோக்கும்படி ஆண்டவர் அனுமதித்தார். ஒருசில மணி நேரங்களில் முடிய வேண்டிய பயணம் எதிர்காற்றின் காரணமாக இரவில் வெகுநேரம் தொடர்ந்தது. சீஷர்கள் அதைச் சகித்துக்கொண்டதற்காக அவர்களைப் பாராட்டினாலும், அவர்களில் ஒருவர்கூட ஏன் காற்றை அடக்கும்படி விசுவாசத்தைச் செயல்படுத்த வில்லை என்பது வியப்பாக இருக்கிறது. ஒரு சில நாட்களுக்கு முன்னர்தான் இயேசுவானவர் அப்படிச் செய்வதை அவர்கள் கண்டிருந்தார்கள். இதில் சுவாரசியமான காரியம் என்னவென்றால் இயேசுவானவர் கடலின்மீது நடந்து வந்தபோது, ‘‘அவர்களைக் கடந்துபோகிறவர் போல் காணப்பட்டார்’’ என்று மாற்கு சுவிசேஷத்தில் எழுதப்பட்டிருக்கிறது [மாற்கு 6:48]. அவர் அற்புதமாக அவர்களைக் கடந்து சென்றுகொண்டிருந்த வேளையில் அவர்கள் தனியாகத் தங்கள் பிரச்சினையை எதிர்நோக்கும்படி அவர் விடப் போகிறார்! இது அவர்கள் தேவனை நோக்கி ஜெபிக்கவில்லை, அவரைத் தேடவில்லை என்று காட்டுகிறது. துன்பத்தின் எதிர்க்காற்றுக்கு எதிராக நாம் வாழ்க்கைப் படகை ஓட்டிச் செல்லும்போது, எத்தனை முறை அற்புதங்களைச் செய்கிறவர் நம்மைக் கடந்து செல்லுகிறாரோ என்று நான் நினைக்கிறேன்.

### விசுவாசம் பற்றிய கொள்கைகள்

தன்னையும் நீரின்மீது நடக்கும்படி கட்டளையிட வேண்டும் என்ற பேதுருவின் அறைகூவலுக்கு இயேசுவானவர் ‘‘வா’’ என்ற ஒரே சொல்லில் பதிலளித்தார். இந்த வார்த்தைக்கு முன்பாகக் கடலில் நடக்கும்படி பேதுரு முயற்சி செய்திருந்தால், அவன் உடனடியாக நீரில் அமிழ்ந்து போயிருப்பான். அவன் விசுவாசத்தினால் காலடி எடுத்து





வைக்காமல், அனுமானத்தினால் எடுத்து வைத்திருப்பான். இதைப் போலவே, இயேசுவானவர் தமது வார்த்தையைச் சொல்லிய *பிறகு*, மற்றச் சீஷர்களில் எவராவது கடலின்மீது நடக்க முயற்சி செய்திருப் பார்களானால், அவர்களும் அமிழ்ந்துபோயிருப்பார்கள். ஏனென்றால் இயேசுவானவர் தமது வாக்குத்தத்தத்தைப் பேதுருவுக்கு மட்டுமே கொடுத்தார். அவர்களில் எவரும் பேதுருவாக இராதபடியால், அவர்களில் எவரும் வாக்குத்தத்தத்துக்குரிய நிபந்தனையை நிறைவேற்றியிருக்க முடியாது. எனவே நம்மில் எவராவது தேவனுடைய வாக்குத்தத்தத்தின்மீது நம்பிக்கை வைப்பதற்கு முன்பாக, அந்த வாக்குத்தத்தம் நமக்குரியதா என்பதையும், அதன் நிபந்தனை களை நாம் நிறைவேற்றியிருக்கிறோமா என்பதையும் உறுதிப்படுத்திக் கொள்ள வேண்டும்.

பேதுரு கடலின்மீது காலடி எடுத்துவைத்தான். ஒரு சில வினாடிகளுக்கு முன்பாக அவன் பேயைக் குறித்த பயத்தில் கத்தினாலும், இப்போதும் சந்தேகத்தைக் கொண்டிருந்தாலும், அவன் நம்பிக்கையில் காலடி எடுத்துவைத்த வேளை இதுவாகும். ஆனால் அற்புதத்தைப் பெற்றுக்கொள்ள வேண்டுமானால், அவன் தனது விசுவாசத்தில் செயல்பட வேண்டும். ஆனால் படகின் நடுக் கம்பத்தைப் பிடித்துக்கொண்டு, கடல்நீரின்மீது தன்னால் நிற்க முடியுமா என்று அவன் சோதித்துப் பார்த்திருப்பானானால், அவனால் அந்த அற்புதத்தை அனுபவித்திருக்க முடியாது. இதைப் போலவே, நாம் ஏதேனும் ஒரு அற்புதத்தைப் பெற்றுக்கொள்ளுவதற்கு முன்பாக, தேவனுடைய வாக்குத்தத்தத்தின்மீது நம்பிக்கை வைக்கும்படி நம்மை ஒப்புக் கொடுத்து நாம் எதை விசுவாசிக்கிறோமோ அதன் அடிப்படையில் செயல்பட வேண்டும். எப்போதுமே நமது விசுவாசம் சோதிக்கப்படும் நேரம் வருவதுண்டு. சிலவேளைகளில் அந்த நேரம் குறுகியதாகவும், சில வேளைகளில் அந்த நேரம் நீண்டதாகவும் இருக்கும். ஆனால் எப்போதுமே நாம் நமது உணர்வுகளின் சாட்சியை உதறித் தள்ளிவிட்டு, தேவனுடைய வார்த்தையின்படி செயல்பட வேண்டிய நேரம் இருக்கும்.

பேதுரு முதலில் நன்றாகவே முன்னேறினான். ஆனால் தான் செய்வது இயலாத ஒன்று என்பதை உணர்ந்து, காற்றையும் அலைகளை யும் நோக்கிப் பார்த்தபோது, அவன் பயப்பட்டான். ஒருவேளை அவன் அடுத்த அடி எடுத்துவைக்கப் பயப்பட்டு, அப்படியே நின்றிருக்கலாம். ஒரு அற்புதத்தை அனுபவித்த தான் இப்போது மூழ்கிக்கொண்டிருப் பதை அவன் கண்டான். நாம் துவங்கியபிறகு விசுவாசத்தில் அதைத் தொடர வேண்டும். தொடர்ந்து நமது விசுவாசத்தைச் செயல்படுத்த வேண்டும். தொடர்ந்து செல்லுங்கள்.

சந்தேகப்பட்டதின் காரணமாகவே பேதுரு மூழ்கத் துவங்கினான். பெரும்பாலும் மக்கள் தங்களுடைய விசுவாசக் குறைவுக்குத் தாங்களே

காரணம் என்பதை ஒப்புக்கொள்ளுவதில்லை. மாறாக, அவர்கள் தேவன்மீது பழிசுமத்தவே விரும்புகிறார்கள். ஆனால் பேதுரு பாதுகாப்பாகப் படகுக்குத் திரும்பக் கொண்டுவரப்பட்ட பிறகு, அவன் மற்றச் சீஷர்களிடம் ''இயேசுவை நோக்கிப் பாதி வழிமட்டும் செல்லுவதே என்னைக் குறித்த தேவனுடைய சித்தமாக இருந்தது'' என்று சொல்லுவதை இயேசுவானவர் கேட்டிருந்தால் அவர் என்ன செய்திருப்பார் என்று நினைக்கிறீர்கள்?

பேதுரு பயந்துபோய் தனது விசுவாசத்தை இழந்துபோன தினாலேயே அவன் தோற்றுப்போனான். இவையே தெளிவான உண்மை யாகும். இயேசுவானவர் அவனைக் குற்றம் சாட்டிக்கொண்டு நின்று கொண்டிராமல், உடனடியாகத் தமது கையை நீட்டி, அவனைப் பிடித்து அவன் மூழ்காதபடி காப்பாற்றினார். பிறகு உடன்தானே அவன் ஏன் சந்தேகப்பட்டான் என்று அவனைக் கடிந்துகொண்டார். பேதுரு சந்தேகப்படுவதற்கு நல்ல காரணம் எதுவும் இல்லை. ஏனென்றால் தேவனுடைய குமாரனின் வார்த்தை வேறு எதையும்விட அதிக நிச்சயமானதாகும். *நம்மில் எவருக்கும் தேவனுடைய வார்த்தையைக் குறித்துச் சந்தேகப்படவோ அல்லது பயப்படவோ அல்லது கவலைப் படவோ எந்தக் காரணமும் இல்லை.*

வேதாகமத்தில் விசுவாசத்தின் விளைவாகப் பெற்ற வெற்றிகளை யும், சந்தேகத்தின் விளைவாகப் பெற்ற தோல்விகளையும் அதிகமாகப் பார்க்கிறோம். யோசுவாவும் காலேபும் தங்கள் விசுவாசத்தின் காரணமாக வாக்குப்பண்ணப்பட்ட நாட்டைச் சுதந்தரித்துக்கொண்டார்கள். ஆனால் அவர்களுடைய சமவயதினர் தங்கள் சந்தேகத்தின் விளைவாக வனாந்தரத்திலேயே மரித்துப் போனார்கள் (பார்க்க, எண். 14:26–30). இயேசுவின் சீஷர்கள் இரண்டிரண்டு பேராக பிரசங்கம்செய்யச் சென்ற போது அவர்களுடைய தேவைகள் சந்திக்கப்பட்டன (பார்க்க, லூக்கா 22:35). ஆனால் ஒருமுறை அவர்கள் அவநம்பிக்கையின் காரணமாகப் பிசாசை விரட்ட முடியாமல் போயிற்று (பார்க்க, மத். 17:19–20). கிறிஸ்துவின் ஊழியத்தின்மூலம் பலர் அற்புதமான சுகத்தைப் பெற்றார்கள், ஆனால் அவநம்பிக்கையின் காரணமாக நாசரேத்திலிருந்த நோயாளிகள் குணமாக்கப்படவில்லை (பார்க்க, மாற்கு 6:5–6).

நானும்கூட எனது விசுவாசம் அல்லது சந்தேகத்துக்கு ஏற்ப, வெற்றியையோ அல்லது தோல்வியையோ தனிப்பட்ட முறையில் அனுபவித்திருக்கிறேன். ஆனால் நான் என் தோல்விகளைக் குறித்துக் கசப்படையவோ அல்லது தேவனைக் குற்றம்சாட்டவோ போவதில்லை. தேவனுடைய தெளிவாக வெளிப்படுத்தப்பட்டுள்ள சித்தத்துக்கு மறுபடியுமாகக் கண்டுபிடிக்கும்படியாக நான் ஏதேனும் சிக்கலான இறையியல் விளக்கம் இருக்கிறதா என்று தேடப்போவதில்லை. தேவனால் பொய் சொல்ல முடியாது என்பதை நான் அறிவேன். எனவே





நான் தோற்றுப்போகும்போது, எனது அவநம்பிக்கையைக் குறித்து மனந்திரும்பி, மறுபடியுமாக நீரின்மீது நடக்கத் துவங்குகிறேன். இயேசு எப்போதுமே என்னை மன்னித்து, நான் அமிழ்ந்துபோவதிலிருந்து என்னைக் காப்பாற்றுகிறார்!

முடிவு தெளிவாக இருக்கிறது: விசுவாசிகள் ஆசீர்வதிக்கப்படு கிறார்கள், சந்தேகப்படுகிறவர்கள் ஆசீர்வதிக்கப்படுவதில்லை! சீஷர்களை உருவாக்கும் ஊழியர் இயேசுவின் முன்மாதிரியைப் பின்பற்றுகிறார். அவர் தன்னில்தானே விசுவாசம் நிறைந்தவராக இருக்கிறார். தமது சீஷர்களிடம் ''தேவனிடத்தில் விசுவாசமுள்ளவர் களாயிருங்கள்'' என்று போதிக்கிறார் (மாற்கு 11:22).